# Chapter XXIII code of Criminal procedure

## DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR

## DEPOSITION OF WITNESS

**Calender :**
**Miscellaneous : CC.No.530/2024**
**Preliminary Register :**
**Police Station :**

**Lw1/Pw1**

**Deposition of witness for :**
**: Neelangarai PS**

**Name :Pappa**
**:W/o. Palavesam**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2025.**
**(Accused present)**

**முதல் விசாரணை :**

நான் நீலாங்கரை பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பள்ளியில் ஹவுஸ் கீப்பிங் ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு காமாட்சி மற்றும் கியாரி ஜான் நடத்தி வந்த தீபாவளி மளிகை நகை பண்டு சீட்டு கட்டி வந்தேன். நகைப்பண்டு சீட்டு மற்றும் 3 சீட்டுகள் ரூ.1,000 மற்றும் ரூ.1,200 மற்றும் ரூ. 1,300 என மூன்று தொகைகளில் 12 மாதங்கள் வரை கட்ட வேண்டும். எதிரிகள் என்னிடத்தில் பண்டு சீட்டில் 25 நபர்களை உறுப்பினர்களாக சேர்த்தால் ஒரு சீட்டு தொகையை இலவசமாக

தருவதாக தெரிவித்தார். நான் வேலை பார்க்கும் நீலாங்கரை கேட் வே தனியார் பள்ளியில் உள்ள ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் எனக்கு தெரிந்தவர்கள் என 126 நபர்களை மேற்படி பண்டு தொகையில் உறுப்பினர்களை சேர்த்து விட்டேன். நான் 12 மாதங்கள் முழுவதுமாக மேற்படி 3 பண்டு சீட்டுகளையும் 126 சீட்டு உறுப்பினர்களின் பணம் நான் கட்டிய மொத்த தொகை ரூ.26 லட்சம் ரூபாயாகும். சீட்டு முடிந்தவுடன் எதிரிகள் பணத்தை திருப்பி தரவில்லை. மேலும் ரூ.1,50,000 தொகையை எதிரிகளிடத்து தெரிந்தவர்களிடம் நான் வாங்கி கொடுத்தேன். அதற்கு மேல் சீட்டு கட்டியவர்கள் பணம் வராததால் என் வீட்டில் வந்து பிரச்சனை செய்தார்கள். அதன் பின்னர் நான் தொட்ந்து கேட்கவே எதிரிகள் சுமார் 2 லட்சம் தொகை வரை எனக்கு திருப்பி கொடுத்தார்கள். மீத தொகையை திருப்பி கொடுக்கவில்லை. எதிரிகள் பணத்தை திருப்பி தாராதால் அவர்கள் மீது நீலாங்கரை காவல் நிலையத்தில் புகாரிளித்தேன். **(மேற்படி புகார் மனு அசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மீத பணம் இதுனால் வரைக்கும் எனக்கு கிடைக்கவில்லை. நான் பண்டு சீட்டு கட்டியதற்கான பண்டு சீட்டு கார்டுகள் அனைத்தும் காமாட்சி வசம் உள்ளது. மேற்கண்ட பண்டுசீட்டுகள் அரசால் பதிவு செய்யப்பட்ட பண்டுகளா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை நீட்டிக்கப்படுகிறது.**

K.Karthik

District Munsif cum Judicial Magistrate Sholinganallur
2025.02.26 15:25:57 +0530